சித்த வைத்திய சிகிச்சை முறைைய மக்கள் இப்போது பெரிதும் விரும்பி ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையிலேதான் இப்போது நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இந்த மருத்துவ முறைக்கு அதிக ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. அதிகமான மூலிகைப் பண்ணைகள் அமைப்பதற்கும் இந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழே விவசாயிகளை நாங்கள் ஊக்குவித்து வருகிறோம். அப்படி விவசாயிகளிடமிருந்து பெறப்படுகிற அந்த மருத்துவச் செடிகளை, மூலிகை இலைகளை எல்லாம் ஏற்றுமதி செய்வதற்குண்டான ஏற்பாட்டையும் அரசு செய்வதாக இருக்கிறது. அந்த வகையிலே சித்த மருத்துவத்தை மக்களிடம் அதிகமாக பிரபலியப்படுத்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசினுடைய உதவியோடு சித்த மருத்துவ ஆராய்ச்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அது நம்முடைய அயனாவரத்திலே இருக்கிற அண்ணா சித்த மருத்துவ வளாகத்திலே இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி முடிந்தவுடன் அங்கே ஆராய்ச்சி மையம் சிறப்பாகச் செயல்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 384, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*

384—

ராஜா தொழிற்பயிற்சி நிலையம்

***6752—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சியில், ராஜா தொழிற்பயிற்சி பயிலகத்தில் பயின்ற மாணவர்களுக்கு படித்த சான்று, மதிப்பெண்களின் பட்டியல் கடந்த பல ஆண்டுகளாக வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

2003 மே 5]

(அ) செஞ்சி பேரூராட்சியில் உள்ள கே.எஸ். ராஜா தொழிற்பயிற்சி மையத்தில் பயின்ற பயிற்சியாளர்கள் அனைவருக்கும் 2001 ஜூலையில் நடைபெற்ற தொழிற் தேர்வு வரை தற்காலிக தொழிற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உள்ளன. அசல் தேசிய தொழிற்சான்றுகள் 1996 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுவிட்டன.

(ஆ) 1997 ஆம் ஆண்டுக்கான தொழிற் தேர்வில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ராஜா தொழிற்பயிற்சி நிலையத்தில் படிக்கின்ற மாணவர்கள் கிராமப்புறத்தைச் சேர்ந்த ஏழை எளிய மாணவர்கள். 1997 ஆம் ஆண்டு படித்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கின்றார்கள். 1997 ஆம் ஆண்டிலிருந்து 2003 வரை 6 ஆண்டுகள் ஆகின்றன. அந்த ஆண்டில் படித்த மாணவர்கள் தொழிற் பழகுநர் பயிற்சியும் பெற முடியவில்லை, சுய தொழில் செய்ய வங்கிகளில் கடனும் பெற முடியவில்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்தக் கல்வி நிறுவனத்தின் மொத்த நடவடிக்கைகளையும் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட ஏழை எளிய மாணவர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற் பிரிவை தொடங்கி, அதற்கு பயிற்சி அளிக்கிறபோது Director General of Employment and Training அவர்களுடைய அனுமதியைப் பெற வேண்டும். இந்தக் குறிப்பிட்ட செஞ்சி பேரூராட்சியிலுள்ள கே.எஸ். ராஜா தொழிற்பயிற்சி மையத்தில் 1995 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அங்கீகாரம் பெறப்படவில்லை. எனவே, அங்கீகாரம் பெறப்படாததன் விளைவாக 1995-ல் அனுமதிக்கப்பட்டு 1997-ல் பயிற்சி முடித்த அந்த மாணவர்களுக்குரிய சான்றிதழ் வழங்கப்படவில்லை. எனவே, அந்த மாணவர்களுடைய எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு முன் தேதியிட்டாவது அவர்களுக்கு அந்த அனுமதியை வழங்கி, சான்றிதழ் வழங்க வேண்டும் என்று Director General of Employment and Training, Delhi-க்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் அந்தச் சான்றிதழ் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மே 5

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ராஜா தொழிற்பயிற்சி நிலையத்தில் ஓட்டுநர் பயிற்சி, மேல்நிலைப் பள்ளி, முதியோர் இல்லம், ஆசிரியர் பயிற்சி என்று பல பயிற்சிகள் அளிக்கப்படுவதாக விளம்பரங்கள் வரப்பெற்றிருக்கின்றன. அதில் பயில்கின்றவர்களுக்கு உரிய முறையில் சான்றிதழ் வழங்கப்படுகின்றதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய அங்கீகாரம் பெற்று, பயிற்சி அளிக்கப்படுமானால், நிச்சயமாக அதற்குரிய சான்றிதழ்கள் அரசின் சார்பில், துறையின் சார்பில் வழங்கப்படும். அப்படி அங்கீகாரம் இல்லாத பயிற்சிகளுக்கு, அரசு அனுமதிக்காத பயிற்சிகளுக்கு சான்றிதழ்கள் நிச்சயமாக வழங்கப்பட மாட்டாது. அந்தப் பயிற்சி நிலையத்தில் அப்படி ஏதாவது தவறு இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய மனுவை அளித்தால், அரசு அதற்குரிய மேல் நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 385, திரு. கே. கே. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

385—

குடும்ப அட்டை வழங்குதல்

•27786—திரு. கே.கே. சிவசாமி:

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலப்பாறைக்குளம் பகுதி மக்களுக்குக் குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS